1972 சனவரி 29]

களாக நியமிக்கப்படத் தகுதி பெற்றவர் என்று பரிவுரை செய்தது. இந்த 27 பேர் அனைவரும் அரசின் ஏற்பளிப்பு பெற்ற பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

DR. H. V. HANDE: Sir, may I know whether it is a fact that complaints were received by the Government that the norms which were originally fixed for this selection have been completely ignored and a new method has been adopted with regard to it ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அப்படிப்பட்ட தகவல் இல்லை. அரசியலமைப்புச் சட்டப்படி நடத்தப்படுகிறது. உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர் இருக்கின்றார். சொவிஸ் கமிஷன் அங்கத்தினர்கள் உடன் இருந்து தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்கள். நாம் அப்படியே ஏற்றுக் கொள்ளுகிறோம். அவர்களுடைய சிபாரிசு எதையும் நாம் மறுக்கவில்லை.

தஞ்சாவூர் மாவட்டத்தில் நிலநீர்

* 142 வின—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடை யளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் பூமிக்கடியிலுள்ள நீரைக்கொண்டு விவசாயம் செய்ய தமது அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நீர்ப்பாசன வசதிக்காக நிலநீரை இறைக்க மாவட்டத்தில் ஏற்கனவே 10,000 வடிகுழாய்க் கிணறுகளும், குழாய்க் கிணறுகளும் உள்ளன. சர்வதேச வளர்ச்சிச் சங்கத்திட்டத்தின் கீழ் 7,000 வடிகுழாய்க் கிணறுகளும், 1,000 குறைந்த ஆழக் குழாய்க் கிணறுகளும், 90 நடுத்தர ஆழக் குழாய்க் கிணறுகளும் இந்த மாவட்டத்தில் அமைத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதைத் தவிர விவசாய மறுநிதி உதவி நிறுவனத் திட்டத்தின் கீழ் கிணறுகள் அமைத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. ஆ. பரந்தாமன்: கிரவுண்ட் வாட்டர் செல் தன்னுடைய பணியைப் பல வட்டங்களில் தொடங்கவில்லை. இதன் காரணமாக நில்வள வங்கிகள் கடன் கொடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, கிரவுண்ட் வாட்டர் செல் தன்னுடைய பணிகளை திருத்தணி போன்ற வட்டங்களில் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கிரவுண்ட் வாட்டர் டிவிஷன் ஒரு இயக்குநரின் கீழ் பணியாற்றி வருகிறது. தமிழ் நாடு முழுவதும் பரிசீலிக்கப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அது ஒரு நீண்டகாலத் திட்ட மாகும்.